# பாராளுமன்றம்

அரசியலமைப்பு சட்டம் சரத்து 79 முதல் 122 வரை பாராளுமன்றத்தின் அமைப்பு, ஒன்று சேர்த்தல், பணிக்காலம், அலுவலர்கள், கோட்பாடுகள், சிறப்புரிமைகள், அதிகாரம் போன்ற பல அம்சங்களை கொண்டுள்ளது. இது பகுதி - V ல் அமைந்துள்ளது.

## அமைப்பு (Organisation)

❖ அரசியலமைப்பின் படி பாராளுமன்றமானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

1. குடியரசுத்தலைவர்
2. மக்களவை
3. மாநிலங்களவை

❖ குடியரசுத்தலைவர் பாராளுமன்றத்தின் ஒருங்கிணைந்த அங்கமாவார். ஏனெனில் பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு குடியரசுத்தலைவர் ஒப்புதல் வழங்கினால் மட்டுமே அது சட்டமாகும்.

❖ குடியரசுத் தலைவரின் பாராளுமன்றம் தொடர்பான செயல்பாடுகளில் இரு அவைகளையும் கூட்டுவது மற்றும் ஒத்திவைப்பது மக்களவையை கலைப்பது, இரு அவைகளிலும் உரையாற்றுவது மற்றும் அவைகள் கூடாதபோது அவசரச் சட்டங்களை பிறப்பிப்பது போன்றவை அடங்கும்.

## இரு அவைகளின் ஒருங்கமைவு

மக்களவை மற்றும் மாநிலங்களவையும் ஒருங்கிணைந்து பாராளுமன்றமாக செயல்படுகிறது.

## மாநிலங்களவை (Rajya Sabha)

❖ அரசியலமைப்பின் நான்காவது அட்டவணையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

- நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை – 250
- தற்போதைய எண்ணிக்கை – 245
- மாநிலங்கள் - 29
- யூனியன் பிரதேசங்கள் - 4
- நியமன உறுப்பினர்கள் - 12

## மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதித்துவம்

❖ மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் தொகையின் அடிப்படையில் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் மறைமுக வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

❖ ஷரத்து 80(3)ன்படி குடியரசுத் தலைவர் இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகியவற்றில் சிறப்பான அறிவும் அனுபவமும் கொண்ட 12 உறுப்பினர்களை நியமிக்கின்றார் என்று ஷரத்து 80(3) கூறுகிறது.

❖ 7 யூனியன் பிரதேசங்களில் இரண்டில் மட்டும் (டெல்லி மற்றும் பாண்டிச்சேரி) மாநிலங்களவைக்கு பிரதிநிதித்துவம் உள்ளது.

❖ இதர 5 யூனியன் பிரதேசங்களில் மக்கள்தொகை மிக குறைவாக இருப்பதால் அவற்றிற்கு மாநிலங்களவையில் பிரதிநிதித்துவம் இல்லை.

## மக்களவை (Lok Sabha) (சரத்து 81)

❖ அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை 550 + 2 = 552.

❖ இதில் 530 உறுப்பினர்கள் மாநிலங்களில் இருந்தும் 20 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- சரத்து 331-ன் படி ஆங்கிலோ இந்தியன் சமூகத்தைச் சார்ந்த 2 உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

## மக்களவை தேர்தல் முறை

- மக்களவை உறுப்பினர்கள் மாநிலங்களில் மற்றும் யூனியன் பகுதிகளில் நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்ட தொகுதிகளில் உள்ள 18-வயது பூர்த்தியான குடிமக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- அறுபத்தி ஒன்றாவது அரசியலமைப்பு சீர்த்திருத்தச் சட்டம் 1988 வயது வந்தோர் வாக்குரிமையை 21ல் இருந்து 18ஆக குறைத்தது.

## நில அடிப்படையிலான தொகுதிகள்

- மக்களவை உறுப்பினர்களை நேரடியாக தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக மாநிலங்களை நில அடிப்படையிலான தொகுதிகளாக அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் ஏற்படுத்தியுள்ளனர்.
- மேலும் ஒவ்வொரு மாநிலங்களும் அதன் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட தொகுதிகளை கொண்டுள்ளன.
- ஒவ்வொரு மாநிலமும் நில அடிப்படையில் தொகுதிகளாக பிரிக்கப்பட்டு மாநிலங்களுக்கு இடையேயும், மாநிலங்களின் தொகுதிகளுக்கு இடையேயும் மக்கள் தொகை விகிதாச்சாரம் சீராக இருக்குமாறு பிரிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பின்பும் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்றவாறு தொகுதிகளை மறு சீரமைப்பு செய்ய வேண்டும்.
- அதன் அடிப்படையில் 1952, 1962, 1972, 2002ல் மறு சீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
- 1976-ல் 42-வது அரசியலமைப்பு திருத்தம் மூலம் மக்களவை தொகுதியை 1971-ம் ஆண்டு மக்கள் தொகையின் படி 2000-ம் ஆண்டுகளை மாற்ற இயலாது என்று கூறியது.
- ஆனால் 2001-ல் 84 வது அரசியலமைப்பு திருத்தம் 1991-ம் ஆண்டு மக்கள் தொகைப்படி உள்ள மக்களவை தொகுதிகளை 2026 ஆண்டு வரை மாற்ற இயலாது என்றது.
- இதில் 2003-ம் ஆண்டில் 87-வது திருத்தம் மூலம் 1991-ம் ஆண்டு மக்கள் தொகை என்பதிற்கு பதிலாக 2001-ம் ஆண்டு மக்கள் தொகை என மாற்றப்பட்டது.

## நாடாளுமன்ற உறுப்பினர்கள்

### உறுப்பினராவதற்கான தகுதிகள்

நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் உறுப்பினர் ஆவதற்குரிய தகுதிகளை ஷரத்து 83 கூறுகிறது.

ஒரு நபர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால்,

- அவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- மாநிலங்களவைக்கு உறுப்பினராக வேண்டுமானால் 30 வயது நிறைந்தவராகவும், மக்களவைக்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட 25 வயது நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.
- கூடுதல் தகுதிகள் பிற சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படலாம்.

### உறுப்பினர் தகுதியிழப்பு

- ஒருவர் இந்தியக் குடிமகனாக இல்லை என்றாலும் அல்லது ஏதேனும் வெளிநாட்டுக்கு விசுவாசியாக இருந்தாலும்,
- அமைச்சர் பதவி அல்லது சட்டத்தால் விலக்களிக்கப்பட்ட பதவியைத் தவிர மத்திய அரசிலோ, மாநில அரசிலோ ஊதியம் பெறும் ஒரு பதவியை வகிப்பவராக இருந்தாலும்,

- வாங்கிய கடனைத் தீர்க்காமல் திவாலாகிப் போனவராக இருந்தாலும்,
- நீதிமன்றத்தால் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்று அறிவிக்கப்பட்டு இருந்தாலும்,
- நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டாத்தால் வேறுவகையில் தகுதியிழப்பு செய்யப்பட்டு இருந்தாலும் அந்த நபர் நாடாளுமன்றத்தின் எந்தவோர் அவைக்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-ன் படி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இதர தகுதி இழப்புகள்ட.

உறுப்பினர்களின் தகுதி இழப்பு தொடர்பாக இறுதி முடிவு எடுப்பது குடியரசுத்தலைவரே ஆவார். இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் எழுந்தால் தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையை கேட்பார்.

## கட்சித்தாவல் மூலம் தகுதி இழப்பு செய்தல்

- அரசியலமைப்பின் படி பாராளுமன்ற உறுப்பினர் ஆன பின்பு கட்சித் தாவலில் ஈடுபட்டால் உறுப்பினர் தகுதி இழப்பர். இதனை அட்டவணை பத்து (X) விவரிக்கிறது.
- கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் படி தகுதி இழப்பிற்கு உள்ளாகும் உறுப்பினர்களாவோர்:
    - உறுப்பினர் தன் விருப்பத்துடன் ஏதேனும் ஓர் அரசியல் கட்சியுடன் சேர்ந்தால்,
    - அரசியல் கட்சியின் விருப்பத்திற்கு மாறாக ஓர் உறுப்பினர் வாக்களிக்காமல் இருந்தாலோ அல்லது எதிராக வாக்களித்தாலோ,
    - சுயேட்சை உறுப்பினரும் ஏதேனும் ஒரு அரசியல் கட்சியில் சேர்ந்தாலோ,
    - எந்த ஒரு நியமன உறுபபினர் 6 மாதத்திற்கு பின்பு ஏதேனும் ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்தாலோ,
- 10-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்சித்தாவல் தடுப்புத் தகுதி இழப்புகளை மாநிலங்களவையில் அதன் தலைவரும் மக்களவையில் மக்களவைத் தலைவரும் முடிவு செய்வர். (குடியரசுத்தலைவர் முடிவு செய்ய இயலாது).
- 1992-ல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் மக்களவைத் தலைவர் / மாநிலங்களவைத் தலைவர்களால் மேற்கொள்ளப்படும் கட்சித் தாவல் உறுப்பினர் தகுதி இழப்பு நீதி புனராய்வுக்கு உட்படும் என்கிறது.

## உறுப்பினர்கள் இடம் காலியாதல்

ஷரத்து 101-ன்படி உறுப்பினர் இடம் காலியாதல்களாவன:

- இரண்டு இடங்களில் உறுப்பினராதல்: ஒருவர் பாராளுமன்றத்தில் இரு சபைகளிலும் அல்லது பாராளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றத்திலும் ஒரே நேரத்தில் உறுப்பினராக இருக்க முடியாது. அவ்வாறு இருந்தால் அவர் ஏதேனும் ஓர் இடத்தை விட்டுவிட வேண்டும்.
- தகுதியிழத்தல்: ஷரத்து 102-ன் படி சில காரணங்களுக்காக தகுதி இழப்பு செய்யப்படும். எ.கா. உறுப்பினர் ஆன பின்பு மனநிலை பாதிப்பட்டால் தகுதி இழப்பு செய்யப்படும்.
- பதவியிழத்தல்: பாராளுமன்ற உறுப்பினர் தாமே முன்வந்து, தாம் சார்ந்திருக்கும் சபையின் தலைவருக்கு பதவியை விட்டு விலக விருப்பம் தெரிவித்து கடிதம் எழுதினாலும் அவரது பதவி காலியாகி விடும்.
- அனுமதியின்றி விடுப்பெடுத்தல்: உறுப்பினர் எவரேனும் தாம் சார்ந்துள்ள சபையின் முன் அனுமதியின்றி அறுபது நாட்களுக்கு மேல் அவை நடவடிக்கைகளில் பங்கு பெறாமல் இருந்தாலும் அவருடைய இடம் காலியானதாக அறிவிக்கப்படும்.
- இதர இனங்கள் :
    - உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தால்,

- அவையினரால் வெளியேற்றப்பட்டால்,
- குடியரசுத்தலைவர், குடியரசுத்துணைத் தலைவர் போன்ற பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால்,
- மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டால் உறுப்பினர் பதவி இழக்க நேரிடும்.

## பாராளுமன்ற அவைத் தலைவர்கள்

### மக்களவை சபாநாயகர்

❖ அரசியலமைப்பின் ஷரத்து 93-ன் படி மக்களவைக்கு சபாநாயகர் ஒருவர் இருக்க வேண்டும். அவர் மக்களவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

❖ அவரது இடம் காலியானால் உடனடியாக வேறொரு உறுப்பினரை சபாநாயகராக தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கான தேர்தல் தேதியை குடியரசுத்தலைவர் அறிவிப்பார்.

❖ பொதுவாக சபாநாயகரின் பதவி மக்களவை பதவிகாலம் முடியும் வரை தொடரும்.

❖ எனினும் அவரது பதவி காலியாவதற்கான சில காரணங்கள் உள்ளன.

- சபாநாயகரின், உறுப்பினர் தகுதி நீக்கப்படல்,
- சபாநாயகரே பதவி விலக விரும்பி துணை சபாநாயருக்கு பதவி விலகல் கடிதத்தை அளித்தல்,
- மக்களவையில் பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வந்து பதவி நீக்கம் செய்தல், போன்ற காரணங்களாலும் பதவி காலியாகும்.

❖ சபாநாயகரை பதவி நீக்கம் செய்யும்போது, 14 நாளுக்கு முன்பு தகவல் அளிக்க வேண்டும். பதவி நீக்க தீர்மானம் மக்களவையில் கொண்டுவரும் போது அவை நடவடிக்கைக்கு அவர் தலைமை தாங்க முடியாது.

❖ ஆனால் அவை உறுப்பினராக அவையின் நடவடிக்கைகளில் பங்கு பெறலாம்.

❖ எப்போதெல்லாம் மக்களவை கலைக்கப்படுகிறதோ அப்போது சபாநாயகர் பதவி காலியாகாது. அடுத்த பொதுத்தேர்தல் நடந்து புதிய அரசாங்கத்தின் சபாநாயகர் பதவியேற்கும் வரை அவரது பதவி தொடரும்.

### சபாநாயகரின் பங்கு, அதிகாரம் மற்றும் பணிகள்

❖ மக்களவையின் தலைவராகவும் அதன் பிரதிநிதியாகவும் திகழ்கிறார்.

❖ மக்களவை உறுப்பினர்களின் அதிகாரம் மற்றும் சிறப்புரிமைகள், ஒட்டுமொத்த அவை மற்றும் அதன் குழுக்கள் அனைத்திற்கும் பாதுகாவலராக திகழ்கிறார்.

❖ அவையின் பொறுப்பாளரான சபாநாயகருக்கு உயர்ந்த மரியாதையும், கௌவரமும், அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

❖ மக்களவையில் சபாநாயகர் மூன்றுவித அதிகாரங்களை பெற்றுள்ளார்.

- அவையின் நடவடிக்கைகளில் சமவாக்கு ஏற்படும் போது சபாநாயகர் தனது வாக்கை செலுத்தி தேக்கநிலையை நீக்குவார்.
- அவையில் தாக்கல் செய்யப்படும் மசோதாக்களில் எவை பண மசோதா (அ) பண மசோதா அல்ல என சபாநாயகரே முடிவு செய்து குடியரசுத்தலைவரின் முன் அனுமதிக்கு அனுப்புவார்.
- 10-வது அட்டவணையில் உள்ளவாறு ஒரு உறுப்பினர் தகுதி இழப்பு பற்றி சபாநாயகர் தான் முடிவு செய்வார்.

## துணை சபாநாயகர் (Deputy Speaker of Lok Sabha)

- ❖ சபாநாயகர் போன்று துணை சபாநாயகர் மக்களவை உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- ❖ சபாநாயகர் தேர்வுக்கு பின்பு துணைசபாநாயகர் தேர்தல் நடைபெறும். இத்தேர்தலுக்கான தேதியை சபாநாயகர் அறிவிப்பார்.
- ❖ எப்பொழுது எல்லாம் துணை சபாநாயகர் பதவி காலியாகிறதோ அப்போது மக்களவை வேறொரு உறுப்பினரை துணை சபாநாயகராக நியமிக்கிறது.
- ❖ சபாநாயகர் பதவி காலியாகும் போது துணை சபாநாயகர் அப்பதவியை வகிக்கிறார். அப்போது சபாநாயகரின் அனைத்து அதிகாரங்களையும் அவர் பெறுகிறார்.
- ❖ மேலும் இச்சமயத்தில் நடைபெறும் இரண்டு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு தலைமையேற்கிறார். (சபாநாயகர் இல்லாத போது)
- ❖ துணை சபாநாயகர் சபாநாயகருக்கு கீழானவர் அல்லது இவர் மக்களவைக்கு நேரடி பொறுப்பாளர் ஆவார்.

## சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகரின் நிறுவனங்கள்

- ❖ 1921-ஆம் ஆண்டிலிருந்து துவங்குகிறது. 1919-ம் ஆண்டு சட்டத்தின்படி இந்தியாவின் முதல் சபாநாயகர் பியூரிக் ஒயிட் முதல் துணை சபாநாயகர் சச்சிதானந்த சின்கா ஆகியோர் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டனர்.
- ❖ 1925-ஆம் ஆண்டில் வித்தல்பாய் பட்டேல் மத்திய சட்டமன்றத்தில் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய சபாநாயகராக திகழ்ந்தார்.
- ❖ சுதந்திரத்திற்கு பின்பு G.V. மௌலாங்கர் சபாநாயகராகவும் அனந்தசயனம் அய்யங்கார் துணை சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ❖ G.V. மௌலாங்கர் அரசியலமைப்பு மன்றம் மற்றும் பாராளுமன்றம் ஆகிய இரண்டிற்கும் சபாநாயகராக திகழ்ந்தார். இவரது பணிக்காலம் சுமார் 10 ஆண்டுகள் (1946 முதல் 1956 வரை) தொடர்ந்தது.

## தற்காலிக சபாநாயகர் (Pro – tem speaker)

- ❖ அரசியலமைப்பின்படி சபாநாயகரின் பதவிக்காலமானது மக்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முதல் கூட்டத்துடன் முடிவடைகிறது.
- ❖ புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவையின் உறுப்பினர்களில் வயதில் மூத்த உறுப்பினரை தற்காலிக சபாநாயகராக குடியரசுத்தலைவர் நியமிப்பது மரபாக பின்பற்றப்படுகிறது. மேலும் அவருக்கான பதவி பிரமாணத்தையும் குடியரசுத்தலைவரே செய்து வைக்கிறார்.
- ❖ சபாநாயகருக்கு உரிய அனைத்து அதிகாரங்களும் இவருக்கும் உண்டு. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களவையின் முதல் கூட்டத்தை இவர் வழிநடத்துவார்.
- ❖ இவரின் முக்கிய கடமை புதிய உறுப்பினர்களுக்கு பதவி பிராமாணம் செய்துவைத்தல் ஆகும்.
- ❖ மக்களவைக்கு புதிய சபாநாயகர் தேர்வு செய்யப்பட்டவுடன் இவரது பதவி காலியாகிவிடும். ஆகையால் இவரது பதவிக்காலம் மிகவும் குறுகிறது.

## மாநிலங்களவை சேர்மேன்

- ❖ மாநிலங்களவையை வழிநடத்துபவர் சேர்மேன் என அழைக்கப்படுகிறார். குடியரசுத் துணைத்தலைவர் பதவியின் நிமித்தமாக மாநிலங்களவையின் தலைவராக / சேர்மேனாக பணியாற்றுகிறார்.
- ❖ மக்களவை சபாநாயகர் போன்ற இவர் மாநிலங்களவையை வழிநடத்தி செல்கிறார்.

❖ மக்களவை சபாநாயகருக்கு சமமான பணிகளை செய்தாலும் இரு முக்கிய பணிகளில் மாநிலங்களவை சேர்மேன் வேறுபடுகிறார்.

1. மக்களவை சபாநாயகர் எவை பண மசோதா என்பதை முடிவு செய்வார். மேலும் அவரது தீர்ப்பே இறுதியானது.
2. பாராளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு மக்களவை சபாநாயகரே தலைமை தாங்குவார்.

❖ மாநிலங்களவை சேர்மேனும் மாநிலங்களவையில் மசோதா தொடர்பான வாக்கெடுப்பில் தனது வாக்கை முதல் முயற்சியிலேயே செலுத்த முடியாது. மசோதாவிற்கு சமமான வாக்குகள் அளிக்கப்பட்டால் அந்த மசோதாவை வெற்றி அல்லது தோல்வி பெற தனது வாக்கை செலுத்துவார்.

## மாநிலங்களவை துணை சேர்மேன்

❖ மாநிலங்களவை உறுப்பினர்களிலிருந்து ஒரு நபர் துணை சேர்மேனாக தேர்வு செய்யப்படுகிறார்.

❖ மக்களவை துணை சபாநாயகரின் பணியை மாநிலங்களவையில் இவர் மேற்கொள்கிறார்.

❖ சேர்மேன் தற்காலிக விடுப்பில் உள்ளபோது அவையை இவர் வழிநடத்திச் செல்வார்.

## பாராளுமன்ற செயலகம்

❖ பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவைக்கும் என தனித்தனி செயலக அலுவலர்கள் உள்ளனர். இவர்களை தேர்வுசெய்தல் மற்றும் அவர்களது பணிகள் ஆகியவற்றை பாராளுமன்றம் ஒழுங்குபடுத்துகிறது.

❖ ஒவ்வொரு அவையின் செயலகத்தின் தலைவராக செயலக – ஜெனரல் (Secretary General) இருப்பார். இந்த ஜெனரல் நிரந்தர அலுவலராக செயலாற்றுவார். இவர் அந்தந்த அவையின் வழிநடத்தும் தலைவர்களை நியமிப்பார்.

❖

## பாராளுமன்றத் தலைவர்கள்
## அவையின் தலைவர் (Leader of the House)

❖ மக்களவை விதியின்படி மக்களவைத் தலைவராக பிரதம மந்திரியே செயல்படுவார். ஒருவேளை பிரதம மந்திரி மாநிலங்களவையின் உறுப்பினராக இருந்தால் மக்களவையின் யாரேனும் ஓர் அமைச்சரை அதன் தலைவராக பிரதம மந்திரி நியமிப்பார்.

❖ மாநிலங்களவையின் விதியின்படி மாநிலங்களவை தலைவராக யாரேனும் ஒரு அமைச்சரை அதன் தலைவராக பிரதமர் நியமிப்பார்.

❖ பிரதமர் மாநிலங்களவையின் உறுப்பினராக இருந்தால் அவரே அதன் தலைவராக செயல்படுவார்.

❖ அவைகளின் தலைவர்கள் அதன் செயல்பாடுகளில் தனது செல்வாக்கை நேரடியாக செலுத்துவர். அமெரிக்க நாடாளுமன்றத்தில் இதே பணியைச் செய்பவரை 'பெரும்பான்மை தலைவர்'(Majority Leader) என அழைக்கின்றனர்.

## எதிர்கட்சித் தலைவர் (Leader of the Opposition)

❖ பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையும் ஓர் எதிர்க்கட்சித் தலைவரை கொண்டிருக்கும். மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 1/10 பங்கிற்கு குறையாத உறுப்பினர்களை பெற்றுள்ள பெரிய அரசியல் கட்சியையே எதிர்க்கட்சியாக பாராளுமன்றம் அங்கீகரிக்கிறது.

❖ இவரது ஊதியம், படிகள் மற்றும் இதர வசதிகள் கேபினட் அமைச்சருக்கு இணையானது.

❖ அமெரிக்காவில் இத்தகைய பணியைச் செய்பவரை அமைச்சரவை தலைவர் (Ministry Leader) என்றும்,

- இந்தியாவில் நிழல் அமைச்சரவை (Shadow Cabinet) என்றும் அழைக்கின்றனர்.
- 1977-ஆம் ஆண்டு மக்களவை மற்றும் மாநிலங்களவையின் எதிர்க்கட்சித் தலைவர்களை சட்டம் அங்கீகரித்தது.

தற்போதைய மக்களவை எதிர்கட்சித் தலைவர் - திரு. சுஷில்குமார் ஷிண்டே
தற்போதைய மாநிலங்களவை எதிர்கட்சித்தலைவர் - திரு. அருண் ஜெட்லி

## கொறடா (Whip)

- பாராளுமன்ற அரசாங்க முறையில் கொறடா முறை மரபாக பின்பற்றப்படுகிறது.
- ஒவ்வொரு அரசியல் கட்சியும் சொந்தமான கொறடாவை கொண்டிருக்கும்.
- கொறடாவை அந்த அரசியல் கட்சித் தலைவர்களே அவையில் அவர்களது பணியை மேற்கொள்ளவும் உதவிபுரியவும் நியமிக்கின்றனர்.
- பாராளுமன்ற செயல்பாடுகளில் உறுப்பினர்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகளை செய்கின்றனர்.
- கொறடாவின் வழிகாட்டலின்படி உறுப்பினர்கள் செயல்படவில்லை எனில் உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## பாராளுமன்ற கூட்டத்தொடர்கள்

### அவையைக் கூட்டுதல் (Summoning)

- பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையையும் கூட்டுவதற்கு குடியரசுத்தலைவர் காலந்தோறும் அனுமதி வழங்குவார். ஆனால் பாராளுமன்றத்தின் இரண்டு கூட்டத்தொடர்களுக்கு இடைப்பட்ட காலம் 6 மாதத்திற்கு அதிகம் இருக்க கூடாது. வழக்கமாக ஆண்டிற்கு 3-முறை பாராளுமன்றம் கூடுகிறது அவைகளாவன.
  - பட்ஜெட் கூட்டத்தொடர் – பிப்ரவரி முதல் மே வரை
  - பருவமழை கூட்டத்தொடர் – ஜூலை முதல் செப்டம்பர் வரை
  - குளிர்கால கூட்டத்தொடர் – நவம்பர் முதல் டிசம்பர் வரை

### அவையை ஒத்திவைத்தல் (Adjournment)

- பாராளுமன்ற கூட்டத்தொடர் பல்வேறு கூட்டங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கூட்டமும் ஒரு நாளைக்கு இரண்டு அமர்வுகளாக இருக்கும். காலை அமர்வு 11 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும்.
- மதிய உணவு இடைவேளைக்கு பிந்தைய அமர்வு பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.
- அவை ஒத்திவைப்பானது நிர்ணயிக்கப்பட்ட சில மணி நேரங்களோ, நாட்களோ அல்லது வாரங்களோ இருக்கும்.

### தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைத்தல் (Adjournment sine die)

- முடிவுக்கு கொண்டுவந்த கூட்டத்தொடர்களை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைப்பது.
- அவையை ஒத்திவைத்தல் மற்றும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தல் போன்ற பணிகளை அவையை வழிநடத்தி செல்லும் சபாநாயகர் மற்றும் மாநிலங்களவை சேர்மேன்கள் மேற்கொள்வர்.

### கூட்டத் தொடர்களை முடிவுக்கு கொண்டு வருதல் (Propogation)

- அவையை வழிநடத்துபவர்கள் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதுடன் அவையின் கூட்டத்தொடர் முடிவுக்கு வருகிறது. அடுத்த சில தினங்களில் குடியரசுத் தலைவர் சம்பிரதாயப்படி கூட்டத்தொடரை முடித்து வைப்பார்.

❖ குடியரசுத்தலைவர் விரும்பினால் நடந்து கொண்டிருக்கும் கூட்டத்தொடரை முடிவுக்கு கொண்டு வரலாம்.

## அவை கலைதல் (Dissolution)

❖ ராஜ்ய சபை / மாநிலங்களவை நிரந்தர அவை ஆகையால் அது கலையாது. மக்களவை 5 – ஆண்டுகளுக்கு ஒரு முறை கலைந்துவிடும்.

❖ குடியரசுத்தலைவர் விரும்பும் போது அவையைக் கலைத்துவிடலாம். அல்லது மக்களவை தானாகவே கலைந்துவிடும்.

❖ இச்சூழலில் அவையில் கொண்டுவரப்பட்ட செயல்நடவடிக்கைகள், மசோதாக்கள், தீர்மானங்கள், அறிக்கைகள், கோரிக்கைகள், உறுதிமொழிகள் போன்ற பலவும் அவையில் தேங்கியிருந்தால் அனைத்தும் அவை கலைந்தவுடன் காலாவதியாகிவிடும்.

❖ எனினும் அவையில் தங்கியிருக்கும் சில மசோதாக்கள் மற்றும் பாராளுமன்ற கமிட்டிகளால் உத்திரவாதம் அளிக்கப்பட்ட அனைத்து மசோதாக்களும் மக்களவை கலைந்தாலும் காலாவதியாகாது.

## காலாவதியாகும் / காலாவதியாகாத மசோதாக்களின் நிலை

❖ மக்களவையில் ஒரு மசோதா தேங்கியிருந்தால் அது காலாவதியாகிவிடும்.

❖ மக்களவையில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டு மாநிலங்களவையில் அது தேங்கியிருந்தாலும் காலாவதியாகிவிடும்.

❖ கருத்து வேறுபாடு காரணமாக இரு அவைகளிலும் நிறைவேறாத மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் மக்களவை கலைவதற்கு முன்பு கூட்டுக் கூட்டத்தை கூட்ட அழைப்பு விடுத்திருந்தால் அந்த மசோதா காலாவதியாகாது.

❖ முாநிலங்களவையில் தோன்றி நிறைவேற்றப்பட்ட மசோதா மக்களவையில் தேங்கியிருந்தால் அந்த மசோதா காலாவதியாகாது.

❖ இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதா குடியரசுத்தலைவர் ஒப்புதலுக்கு காத்திருந்தால் அந்த மசோதா காலாவதியாகாது.

❖ இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதா குடியரசுத்தலைவர் மறுபரிசீலனைக்கு அனுப்பிய பின்பு மக்களவை கலைந்தாலும் அந்த மசோதா காலாவதியாகாது.

## கோரம் (Quorum) / குறைந்தபட்ச வருகை

❖ அவைகளின் அன்றாட பணிகள் நடைபெற வேண்டுமானால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச உறுப்பினர்களாவது வருகை புரிந்திருக்க வேண்டும்.

❖ அவைகளை வழிநடத்தி செல்லும் மக்களவை சபாநாயகர் / மாநிலங்களவை சேர்மன் உள்பட மொத்த உறுப்பினர்களில் 1/10 பங்கிற்கு குறையாமல் வருகை தர வேண்டும்.

❖ குறைந்தபட்சம் மக்களவைக்கு 55 உறுப்பினர்களும் மாநிலங்களவைக்கு 25 உறுப்பினர்களும் வருகை தர வேண்டும்.

## பாராளுமன்ற மொழி

❖ அரசியலமைப்பின் ஷரத்து 343-ன் படி இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகியன பாராளுமன்ற நடவடிக்கை மொழியாக இருக்கும்.

❖ அவைகளை வழிநடத்தும் சபாநாயகர் / சேர்மன் ஆகியோரின் அனுமதியுடன் உறுப்பினர்கள் தங்களது தாய்மொழியில் பேசலாம். அவர்களது மொழியை பாராளுமன்ற மொழியில் உடனுக்குடன் மொழிபெயர்க்க மொழிபெயர்ப்பாளர்கள் இருப்பார்கள்.

❖ அரசியலமைப்பின்படி ஆங்கிலம் அரசிலமைப்பு தொடங்கியதில் இருந்து 15 ஆண்டுகள் வரை பாராளுமன்ற மொழியாக செயல்படும் என்றிருந்தது. ஆனால் அலுவலக மொழிச்சட்டம் 1963-ன் படி இந்தியுடன்

ஆங்கிலமும் இணைந்து பாராளுமன்ற மொழியாக தொடரும் என அறிவிக்கப்பட்டது.

- ❖ நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தியும், ஆங்கிலமும் பின்பற்றப்படும் என்று அரசியலமைப்பு கூறுகிறது.
- ❖ இவ்விரண்டு மொழிகளிலும் பேச இயலாத எந்த உறுப்பினரையும் அவையில் அவருடைய தாய்மொழியில் பேசுவதற்கு அவைத் தலைவர் அனுமதி அளிக்கலாம்.

## நாடாளுமன்ற அலுவல்களில் பயன்படும் சாதனங்கள்

### கேள்வி நேரம் (Question Hour)

- ❖ பாராளுமன்ற அவைகளின் ஒவ்வொரு அமர்வின் முதல் நேரம் கேள்வி நேரம் எனப்படும். இந்நேரத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிப்பர். இக்கேள்விகள் மூன்று வகைகளாகும்.

1. நட்சததிரக் குறியிட்ட கேள்விகள் - இவற்றில் நட்சத்திரக் குளி இடப்பட்டு இருக்கும். இத்தகைய கேள்விகளுக்கு அமைச்சர்கள் வாய்மொழி பதில் அளிக்க வேண்டும். துணைக் கேள்விகளும் கேட்க அனுமதி உண்டு.
2. நட்சத்திர குறியிடாத கேள்விகள் - இவற்றில் நட்சத்திரக் குறி இடப்படாது. இவற்றிற்கு அமைச்சர்கள் எழுத்து பூர்வடமாக பதில் அளிப்பர். வாய்மொழியாக பதில் அளிக்கத் தேவை இல்லை என்பதால் துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்பில்லை.
3. குறைந்த கால அவகாச கேள்விகள் - இவை பத்து நாட்களுக்குள் அறிவிப்பு கொடுக்கப்பட்டு கேட்கப்படும் கேள்விகள் ஆகும். இவற்றிற்கு வாய்மொழியாக பதில் அளிக்கப்படும்.

### பூஜ்ய நேரம் (Zero Hour)

- ❖ அவையின் கேள்வி நேர முடிவிற்கும் அடுத்த நிகழ்ச்சியின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட நேரமே சுழிநேரம் எனப்படும்.
- ❖ இதில் முன்னறிவிப்பின்றி உறுப்பினர்குள் கேள்விகள் கேட்கலாம்.
- ❖ 1962-லிருந்து இந்தியப் பாராளுமன்ற நடைமுறையில் இது இடம் பெற்றுள்ளது.
- ❖ இது இந்திய பாராளுமன்ற நடைமுறை ஆகும்.

### தீர்மானங்கள் (Motions)

- ❖ அமைச்சர்கள் அல்லது உறுப்பினர்கள் கொண்டு வரும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அல்லது நிராகரிப்பதன் மூலம் அவை ஒரு பிரச்சினையில் தனது முடிவை அல்லது கருத்தை வெளிப்படுத்தும். இத்தகைய தீர்மானங்கள் அவைத் தலைவரின் ஒப்புதலுடனேயே அவையில் அறிமுகப்படுத்தப்படும்.

### விவாத நிறுத்தத் தீர்மானம் (Closure Motion)

- ❖ ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் போதுமான அளவு விவாதம் செய்யப்பட்டுவிட்டது எனக் கருதினால் மேற்கொண்டு விவாதத்தை நடத்தாமல் வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்யுமாறு கோரும் தீர்மானமே விவாத நிறுத்தத் தீர்மானம் ஆகும்.

### கில்லட்டின் (Guillotine)

- ❖ கில்லட்டின் என்பது வாத நிறுத்த தீர்மானத்தின் ஒரு வகையாகும். இதன்படி, அவையில் தொடர்ந்து விவாதம் நடத்த கால அவகாசம் இல்லாத நிலையில், ஏற்கனவே விவாதம் முடிவுற்ற மசோதாவின் ஒரு பகுதியோடு விவாதம் நடைபெறாத பகுதிகளையும் இணைத்து வாக்கெடுப்புக்கு விடப்படும்.
- ❖ பொதுவாக பட்ஜெட் விவாதத்தின் போது இது அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

### உரிமை மீறல் தீர்மானம் (Previlege Motion)

- ஒரு அமைச்சர் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமையை மீறினால் அவர் மீது உரிமை மீறல் தீர்மானம் கொண்டு வரப்படும்.
- ஒரு அமைச்சர் அவைக்கு உண்மையை தெரிவிக்கவில்லை அல்லது தவறான அல்லது திரிக்கப்பட்ட தகவல்களை கூறியதின் மூலம் அவையின் அல்லது உறுப்பினர்களின் உரிமைகளை மீறி விட்டார் என அவருக்கெதிராக உறுப்பினர் ஒருவரால் கொண்டு வரப்படும் தீர்மானமே உரிமை மீறல் தீர்மானம் என்பதாகும்.
- இது குறிப்பிட்ட அமைச்சரைக் கண்டிக்கும் பொருட்டு கொண்டு வரப்படுவதாகும்.

## கவன ஈர்ப்புத் தீர்மானம் (Calling Attention Motion)

- அவசரமான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பொதுப்பிரச்சினையில் அமைச்சரின் கவனத்தை ஈர்க்கவும், அப்பிரச்சனை தொடர்பான அதிகாரப் பூர்வமான தகவல்களை அளிக்கவும் கோரி உறுப்பினரால் கொண்டு வரப்படும் தீர்மானமே கவன ஈர்ப்புத் தீர்மானம் ஆகும்.
- 1954-ஆம் ஆண்டிலிருந்து இது இந்தியப் பாராளுமன்ற நடைமுறையில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

## ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் (Adjounment Motion)

- அவசரமான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பொதுப்பிரச்சினையில் அவையின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும், அப்பிரச்சினையை விவாதிக்க அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்கவும் கோரி கொண்டு வரப்படும் தீர்மானமே ஒத்தி வைப்புத் தீர்மானம் ஆகும்.
- அவையின் 50 உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே இத்தீர்மானம் அனுமதிக்கப்படும். மேலும் இது அரசை கண்டனம் செய்யும் வகையில் அமைந்திருப்பதால் மாநிலங்களவையில் இத்தீர்மானத்தை கொண்டுவர முடியாது.
- ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீதான விவாதம் 2 மணி நேரங்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

## நம்பிக்கை இல்லாத் தீர்மானம் (No-Confidence Motion)

- அமைச்சரவை கூட்டாக மக்களவைக்கு பொறுப்புடையதாகும் என ஷரத்து 75 கூறுகிறது.
- மக்களவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரையில் தான் அமைச்சரவை பதவியில் நீடிக்க முடியும்.
- மக்களவை நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி அமைச்சரவையை பதவியிலிருந்து நீக்கலாம். இத்தீர்மானம் அனுமதிக்கப்பட 50 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

## கண்டனத் தீர்மானம் (Censure Motion)

- அமைச்சரவையின் குறிப்பிட்ட கொள்கையையோ அல்லது செயல்பாடுகளையோ கண்டிக்கும் பொருட்டு கொண்டு வரப்படும் தீர்மானமே கண்டனத் தீர்மானம் ஆகும். இதனை ஒரு அமைச்சருக்கு அல்லது முழு அமைச்சரவைக்கு எதிராகக் கொண்டுவரலாம்.
- இத்தீர்மானத்தை மக்களவை நிறைவேற்றினால் அமைச்சரவை பதவி விலக வேண்டிய அவசியமில்லை.

| எண் | கண்டனத் தீர்மானம் | நம்பிக்கை இல்லாத் தீர்மானம் |
|---|---|---|
| 1. | மக்களவையில் இத்தீர்மானம் கொண்டுவர காரணம் கூற வேண்டும். | மக்களவையில் இத்தீர்மானம் கொண்டுவர காரணம் கூற தேவையில்லை. |
| 2. | இத்தீர்மானமானது ஒரு தனி அமைச்சர் மீதோ அல்லது ஒரு அமைச்சரவை குழு மீதோ அல்லது ஒட்டுமொத்த குழு மீதோ கொண்டு வரலாம். | இத்தீர்மானமானது ஒட்டுமொத்த அமைச்சரவை குழு மீது மட்டுமே கொண்டு வர முடியும். |
| 3. | இக்கண்டனத் தீர்மானமானது ஒரு குறிப்பிட்ட கொள்கை அல்லது செயல்பாடுகளை கண்டிப்பதாக அமையும். | மக்களவையின் பெரும்பான்மை குறையும் சூழலில் இத்தீர்மானம் கொண்டு வரப்படும். |
| 4. | மக்களவையில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அமைச்சரவை / அரசு கலைய தேவையில்லை. | இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் கட்டாயமாக அரசு / அமைச்சரவை கலைய வேண்டும். |

## பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் நடைமுறை

❖ நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் சட்டமியற்றும் நடைமுறைகள் யாவும் ஒரே மாதிரியானவையே. இரு அவைகளிலும் சட்ட முன் வடிவு/மசோதா ஒரே மாதிரியான நிலைகளைக் கடந்தே இறுதியில் நிறைவேற்றப்பட்ட சட்டமாகிறது.

❖ பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் மசோதா இருவகைப்படும்.

- ஒரு மசோதா அமைச்சர் ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்டால் அது “அரசாங்க மசோதா” எனப்படும்.
- ஒரு மசோதா தனி உறுப்பினர் ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்டால் அம்மசோதா “தனிநபர் மசோதா” எனப்படும். அவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்கள் பெரும்பாலும் அரசாங்க மசோதாக்களாகவே இருக்கும்.

❖ மேலும் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் மசோதாவை நான்கு வகைப்படுத்தலாம்.

- சாதாரண மசோதா
- பண மசோதா
- நிதி மசோதா
- அரசியலமைப்பு சீர்த்திருத்த மசோதா

## சாதாரண மசோதாக்களை நிறைவேற்றும் முறை

❖ சாதாரண மசோதாக்களை பாராளுமன்றத்தின் இரு அவைகளில் எந்தவொரு அவையிலும் அறிமுகப்படுத்தலாம்.

❖ இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்ட மசோதாக்கள் சட்டமாகு முன்

❖ பாராளுமன்றத்தில் மூன்று கட்டங்களைத் தாண்டி வரவேண்டி உள்ளது.

## முதல் கட்டம்:

❖ இக்கட்டத்தில் அமைச்சர் அல்லது அவையின் உறுப்பினர் மசோதாவை பாராளுமன்றத்தின் ஏதேனும் ஓர் அவையில் அறிமுகம் செய்வார்.

❖ சபைத் தலைவரின் அனுமதியுடன் அம்மசோதா அரசிதழில் வெளியிடப்படும். அம்மசோதாவுடன் அதன் நோக்கங்களும், காரணங்களும் கொண்ட ஓர் அறிக்கையும் வெளியிடப்படும்.

❖ இக்கட்டத்தில் அம்மசேதாவின் மீது எவ்வித விவாதமும் நடத்தப்படுவதில்லை.

## இரண்டாவது கட்டம்

❖ இக்கட்டத்தில் மசோதாவின் நோக்கங்கள், பொருள் முக்கியத்துவம் ஆகியவைகளைப் பொறுத்துப் பல நிலைகளில் விவாதிக்கப்படலாம்.

- சபையானது தெளிவான / ஆய்வுக்கொன்று மசோதாவை உடனடியாக அல்லது பின்னொரு தேதியில் எடுத்துக் கொண்டு விவாதிக்கலாம்.
- மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட சபையின் உறுப்பினர்கள் மட்டும் அடங்கிய “தெரிவுக்குழுவின்” பரிசீலனைக்கு மசோதாவை அனுப்பி வைக்கலாம் அல்லது
- இரு சபையின் உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கும் அனுப்பி வைக்கலாம். இதற்கு மற்றொரு அவையின் அனுமதியும் வேண்டும் அல்லது,
- பொதுமக்களின் கருத்தறிய மக்களின் பார்வைக்காக மசோதா வெளியிடப்படலாம்.

❖ மேற்கண்ட முறையில் மீதான கருத்துக்களைப் பெற்றவுடன் சபை மசோதாவை மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறது. இந்நிலையில் மசோதாவின் ஒவ்வொரு விதியும், பகுதியும் தனித்தனியாக விவாதிக்கப்படுகின்றன.

❖ சபை உறுப்பினர்கள் திருத்தங்களை கொண்டு வந்தால் அவையும் ஆராயப்படும். பிறகு மசோதாவின் ஒவ்வொரு விதிகளின் மீதும் தனித்தனியாக வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

## மூன்றாவது கட்டம்

❖ இந்நிலையில் மசோதாவைப் பற்றி பொதுவான விவாதம் மட்டுமே நடத்தப்படும். ஏற்கனவே தனிப்பட்ட விதிகள் ஆய்வு செய்யப்பட்டு விட்டதால் மசோதாவை ஏற்பதா அல்லது நிராகரிப்பதா என்ற அடிப்படையில் மட்டுமே விவாதம் நடைபெறும். இந்நிலையில் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

❖ பொது விவாதம் முடிந்த பிறகு மசோதா வாக்களிப்புக்கு விடப்பட்டு சபைத் தலைவரால் “மசோதா சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது” அல்லது “நிராகரிக்கப்பட்டது” என அறிவிக்கப்படுகிறது. இதன்பின் மற்றொரு அவையில் மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

## நான்காவது கட்டம்

❖ இங்கும் முதல் அவையில் பின்பற்றப்பட்ட மூன்று கட்ட நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும்.

❖ அதன்பின் அந்த அவை பின்வரும் முடிவுகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.

- அம்மசோதாவை திருத்தங்கள் ஏதுமின்றி அவை கொடுத்தவாறே நிறைவேற்றலாம்.
- மசோதாவை திருத்தங்களுடன் நிறைவேற்றி மூல சபைக்கே மறுபரிசீலனைக்கு அனுப்பலாம்.
- மசோதாவை ஒட்டு மொத்தமாக நிராகரிக்கலாம்.
- மசோதாவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வைத்திருக்கலாம்.

### ஐந்தாவது கட்டம்

❖ பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் தனியாகவோ, அல்லது கூட்டு அமர்வின் மூலமாகவோ நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் இறுதியாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்படுகின்றன.

❖ இந்நிலையில் குடியரசுத் தலைவர் கீழ்க்கண்ட முடிவுகளில் ஏதேனும் ஒன்றை எடுக்கலாம்.

1. பாராளுமன்றம் நிறைவேற்றிய மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கலாம்.
2. ஒப்புதல் அளிக்க மறுக்கலாம். இதனால் மசோதா சட்டமாக இயலாது போய் விடுகிறது.
3. மசோதாவை மறுபரிசீலனை செய்யும்படி கோரி மீண்டும் பாராளுமன்றத்திற்கே திரும்பி அனுப்பலாம். ஆனால் இரண்டாம் முறையாக நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் அங்கீகாரம் மறுக்க முடியாது. ஒப்புதல் அளித்தே தீர வேண்டும்.

❖ இவ்வாறு இந்தியாவின் பாராளுமன்றத்தில் ஒரு மசோதாவானது சட்டமாகிறது.

### இரு அவைகளின் கூட்டு அமர்வு

❖ சில சூழல்களில் ஒரு மசோதா குறித்து இரு அவைகளும் ஒத்துப்போக முடியாத, முரண்பாடான நிலை ஏற்படலாம்.

❖ அப்பொழுது அம்மசோதா நிறைவேற்றப்பட ஒரு முட்டுக்கட்டை நிலை உருவாகிவிடும். இம்முட்டுக்கட்டை நிலையைத் தீர்க்க இரு அவைகளையும் ஒன்றாகக் கூட்டி, அம்மசோதாவை நிறைவேற்றுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 108 வகை செய்கிறது.

❖ இவ்வாறு இரு அவைகளையும் ஒன்றாகக் கூட்டுவது கூட்டு அமர்வு எனப்படும்.

### முட்டுக்கட்டை நிலைக்கான காரணங்கள்

❖ பிரிவு 108-ன் படி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் முட்டுக்கட்டை நிலை ஏற்படுகிறது.

❖ அதாவது, ஒரு மசோதா ஒரு அவையால் நிறைவேற்றப்பட்டு, மற்றொரு அவையின் நிறைவேற்றலுக்காக அனுப்பப்படும் பொழுது,

- அந்த மற்றொரு அவை அம்மசோதாவை நிராகரித்து விட்டால், அல்லது
- அம்மசோதாவில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து இரு அவைகளும் இறுதியாக ஒத்துப்போக முடியவில்லை என்றால், அல்லது
- அம்மசோதாவை மற்றொரு அவை பெற்ற பிறகு ஆறு மாதங்கள் ஆகியும், அதனை நிறைவேற்றாமலேயே காலம் கடத்தி இருந்தால் மேற்படியான முட்டுக்கட்டை நிலை ஏற்படுகிறது.

❖ குடியரசுத்தலைவர் பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தை கூட்டி நிலுவையில் உள்ள மசோதாவின் மீது வாக்கெடுப்பை நடத்துவார்.

❖ இவ்வகை கூட்டுக் கூட்டம் சாதாரண மசோதா அல்லது நிதி மசோதா மீது மட்டுமே பொருந்தும்.

❖ பண மசோதா மற்றும அரசியலமைப்பு திருத்த மசோதாவிற்கு கூட்டு கூட்டம் கூட்ட இயலாது.

❖ ஒரு மசோதா மக்களவை கலைந்துவிட்டதினால் காலாவதியாகிவிட்டால் அந்த மசோதாவிற்கு கூட்டுக் கூட்டம் கூட்ட இயலாது. ஆனால் மக்களவை கலைந்தாலும் ஒரு மசோதாவின் முக்கியத்துவம் கருதி குடியரசுத்தலைவர் கூட்டுக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கலாம்.

❖ மக்களவையின் சபாநாயகரே கூட்டு கூட்டத்திற்கு தலைமை ஏற்கிறார். சபாநாயகர் இல்லாத சூழலில் துணை சபாநாயகர் தலைமை தாங்குவார்.

❖ ஒருவேளை அவரும் இல்லையெனில் மாநிலங்களவையின் துணை சேர்மேன் தலைமை ஏற்பார். அவரும் இல்லாதபட்சத்தில் கூட்டுக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்களிலிருந்து ஒருவர் தலைமை தாங்க தேர்ந்தெடுக்கப்படுவார்.

❖ மக்களவையின் நடத்தைவிதியின் படி கூட்டுக் கூட்டம் நடக்கும்.

இரு அவைகளின் கூட்டு அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாக்களாவன

1. வரதட்சணை ஒழிப்பு மசோதா 1960
2. வங்கிப் பணியாளர் தேர்வாணையம் (திரும்பப் பெறல்)
3. தீவிரவாத தடுப்பு மசோதா (பொடா) 2002.

## நிதி மசோதாக்கள்

❖ நிதி தொடர்பான விவரங்களை இம்மசோதா கொண்டிருக்கும். வருவாய் அல்லது செலவு.

❖ இவை மூன்று வகைப்படும். அவைகளாவன.

1. பண மசோதா (ஷரத்து 110)
2. நிதி மசோதா - I (ஷரத்து 117 (1))
3. நிதி மசோதா - II (ஷரத்து 117 (3))

❖ இந்த வகைப்பாட்டின் படி பண மசோதா நிதி மசோதாக்களை ஒத்துள்ளது. அதாவது அனைத்து பண மசோதாக்களும் நிதி மசோதாக்களே ஆனால், அனைத்து நிதி மசோதாக்களும் பண மசோதாக்கள் அல்ல.

### பண மசோதா

❖ பின்வரும் விஷயங்களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்தையோ உள்ளடக்கியது மட்டுமே பண மசோதா என்று அரசியலமைப்பின் பிரிவு 110 கூறுகிறது. அவையாவன

- எந்த வரியின் விதிப்பும், ஒழிப்பும், குறைப்பும், மாற்றலும் அல்லது ஒழுங்குபடுத்தலும்,
- பணத்தை கடனாக வாங்குவதில் ஒழுங்குமுறை அல்லது இந்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட பொறுப்புநிதி ஏதாவது,
- திரட்டு நிதி அல்லது நிகழ்வுகள் நிதியின் பாதுகாப்பு அந்நிதியிலிருந்து பணத்தைக் கொடுத்தல் அல்லது எடுத்தல்.

### பாராளுமன்றத்தில் பண மசோதா நிறைவேற்றப்படும் தனிப்பட்ட நடைமுறை

❖ பண மசோதா ஒன்றினை மக்களவையில் (House of the People) மட்டுமே அறிமுகப்படுத்த முடியும். மாநிலங்களவையில் (Coucil of States) முடியாது.

❖ பண மசோதாவானது மக்களவையால் நிறைவேற்றப்பட்ட பிறகு, அது மாநிலங்களவையின் பரிந்துரைகளுக்காக (Recommendations) அனுப்பப்படும்.

❖ மாநிலங்களவை அதனை தன்னுடைய பரிந்துரைகளுடன் 14 தினங்களுக்குள் மக்களவைக்கு திருப்பி அனுப்பி வைத்துவிட வேண்டும்.

❖ மாநிலங்களவையின் பரிந்துரைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது

எல்லாவற்றையுமோ நிராகரித்துவிட்டு, அப்பண மசோதாவினை மாநிலங்களவையின் பரிந்துரையில் ஏற்றுக் கொண்டு விட்டால், மேற்படி பண மசோதா இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக கருதப்படும்.

- ஒரு பண மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டு, மாநிலங்களவையின் பரிந்துரைகளுக்காக அனுப்பப்படும்பொழுது, அதனை பரிந்துரைகளுடன் 14 தினங்களுக்குள் மக்களவைக்கு மாநிலங்களவை அனுப்பி வைக்காவிட்டால், அந்த 14 தினங்கள் முடிவுற்றவுடன் மேற்படி பண மசோதா இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.
- அதாவது, மக்களவையில் நிறைவேற்றப்பட்டவாறே ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வாறு மாநிலங்களவையானது பண மசோதாவை 14 தினங்களுக்கு மட்டுமே நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்.
- மாநிலங்களவையின் அனைத்து பரிந்துரைகளையும் மக்களவை நிராகரித்துவிட்டாலும் கூட, அப்பண மசோதா மக்களவையில் எப்படி நிறைவேற்றப்பட்டதோ, அதே வடிவிலேயே இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும். பிறகு இது குடியரசுத் தலைவரின் இசைவிற்காக அனுப்பப்படுகிறது.

## நிதி மசோதா - I

- பண மசோதாவை ஒத்த தன்மையுடையது
    - பணமசோதாவும் நிதி மசோதாவும் மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தமுடியாது.
    - இவையிரண்டும் குடியரசுத்தலைவரின் அனுமதியுடன் அறிமுகப் படுத்தப்பட வேண்டும்.
- நிதி மசோதாவானது சாதாரண மசேதாவின் நடைமுறைக்கு சமமான முறையில் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறது. (இதில் மேற்கொள்ளும் திருத்தங்களைத் தவிர வரி குறைப்பு அல்லது வரி நீக்கம் செய்து அவையில் குடியரசுத்தலைவரின் அனுமதியில்லாமல் இடம்பெற செய்ய இயலாது).
- இரண்டு அவைகளுக்கும் மாறுபட்ட அபிப்பிராயம் நேரும் போது, குடியரசுத் தலைவர் கூட்டமர்வை ஏற்படுத்துகிறார்.

## நிதி மசோதா - II

- ஒருங்கிணைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளும் செலவினங்கள் இந்த மசோதாவில் அடங்கும். ஆனால் ஷரத்து 110-ல் இடம் பெறாத அனைத்து இனங்களும் இதில் அடங்கும்.
- நிதி மசோதா பிரிவு II ஒரு சாதாரண மசோதாவைப் போன்றது. இது இரண்டு சபைகளிலுமே அறிமுகப்படுத்தப்பட முடியும். இதை நிராகரிப்பதற்கோ அல்லது திருத்தம் செய்வதற்கோ ராஜ்ய சபாவிற்கு முழு அதிகாரம் உண்டு.
- நிதி வழங்கலில் இது ஒரே ஒரு சிறப்பு அம்சத்தைப் பெற்றுள்ளது. இது குடியரசுத் தலைவரின் பரிந்துரை இல்லாமல் இரு அவைகளிலுமே அறிமுகப்படுத்தப்பட முடியாது.

## பட்ஜெட் சமர்ப்பித்தல்

- ஷரத்து 112 பட்ஜெட் பற்றி கூறுகிறது. இங்கு இது ஆண்டு நிதி நிலைமை அறிக்கை என குறிப்பிடப்படுகிறது. மேலும் நமது அரசியலமைப்பில் ‘பட்ஜெட்’ என்ற சொல் எங்கும் இடம்பெறவில்லை.
- குடியரசுத் தலைவர் ஒவ்வொரு நிதி ஆண்டிற்கும் (ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை) உண்டான, வருடாந்திர நிதி அறிக்கையை பாராளுமன்றத்தில் இரு அவைகளின் முன்பும் வைக்க வேண்டும்.
- இவ்வறிக்கையானது வரவிருக்கும் ஆண்டின், திட்டமிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களைக் குறித்த விவரங்களைத் தருகிறது.

❖ இதில் திட்டமிடப்பட்ட செலவினங்களானது இரண்டு தனியான தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டு உள்ளது.

- இந்தியாவின் திரட்டு நிதியிலிருந்து செய்யப்பட வேண்டிய செலவினங்கள்
- இந்தியத் திரட்டு நிதியிலிருந்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பிற செலவினங்கள்

❖ கீழ்வரும் இனங்களுக்காக ஒருங்கிணைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளும் செலவுகளுக்கு பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடத்தலாம். ஆனால் வாக்கெடுப்பு நடத்த முடியாது.

❖ அவைகளாவன

- குடியரசுத்தலைவரின் ஊதியம் மற்றும் அவரின் அலுவலக செலவுகள்
- மாநிலங்களவை சேர்மேன் மற்றும் துணை சேர்மேன், மக்களவை சபாநாயகர், துணை சபாநாயகர் இவர்களின் ஊதியம் மற்றும் படிகள்,
- உச்சநீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம் மற்றும் படிகள் டேலும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியம், மைய அரசின் தலைமை கணக்கர் மற்றும் தணிக்கையாளர்,(CAG) மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் படிகள்

❖ பட்ஜெட்டானது பின்வரும் நிலைகளை கடந்து செல்லும்.

## 1. பட்ஜெட் அறிமுகம்

❖ இரயில்வே பட்ஜெட் (பிப்ரவரி மாதம் மூன்றாவது வாரம்)

❖ பொது பட்ஜெட் (பிப்ரவரி மாதத்தின் கடைசி வேளை நாள்)

'அக்வொர்த் கமிட்டியின்' பரிந்துரையின்படி இரயில்வே பட்ஜெட்டானது பொது பட்ஜெட்டிலிருந்து 1921-ல் தனியாக பிரிக்கப்பட்டது.

## 2. பொது விவாதங்கள்

❖ பட்ஜெட் மீது பொது விவாதங்கள் 3-லிருந்து 4 நாள்களுக்கு நடைபெறும்.

## 3. நிர்வாக கமிட்டிகளின் சோதனை

❖ பொது விவாதங்கள் முடிந்த பின்பு அவையானது 3 அல்லது 4 வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்படும். இந்த இடைவெளியில் பாராளுமன்றத்தின் பல்வேறு துணைக்குழுக்கள் ஒவ்வொரு அமைச்சகத்தின் மானியக் கோரிக்கை மீதும் சோதனை மற்றும் விவாதங்களை மேற்கொண்டு அதற்கான அறிக்கைகளை தயார் செய்யும்.

## 4. மானியக் கோரிக்கை மீது ஓட்டெடுப்பு

❖ பட்ஜெட்டில் உள்ளடக்கிய செலவு மதிப்பீடுகள் மற்றும் மானியங்கள் மீது மக்களவை மேற்கொள்ளும் வாக்கெடுப்புகள். ஒவ்வொரு அமைச்சரவை வாரியாக மானியக் கோரிக்கைகள் வரிசைப்படுத்தப்பட்டிருக்கும். மேலும் பெரிய பணிகளுக்கு தனியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கும்.

❖ ஒவ்வொரு கோரிக்கைகளுக்கும் முதலில் மொத்த மானிய மதிப்பீடுகளும் இரண்டாவது ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனி மானிய மதிப்பீடுகளும் இடம் பெற்றிருக்கும்.

❖ மானியக் கோரிக்கை மீது மக்களவை மட்டுமே வாக்களிக்கும் சிறப்பு உரிமையை பெற்றுள்ளது. மாநிலங்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை. மானியக் கோரிக்கை மீது விவாதங்கள் நடத்த 26-நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

❖ இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மசோதாக்கள் வாரியாக விவாதித்து மானியங்களை குறைப்பதற்கு தீர்மானங்கள் கொண்டு வருவர். இத்தகைய தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானங்கள் என அழைக்கப்படுகின்றன.

## பல்வேறு வகையான வெட்டுத் தீர்மானங்கள்

### கொள்கை வெட்டுத் தீர்மானங்கள்

❖ இத்தீர்மானத்தின்படி ஒட்டு மொத்த கொள்கையையும் புறக்கணிக்கும்படி மானிய கோரிக்கையாக ரூபாய் ஒன்று (1) மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும் என உறுப்பினர்கள் வலியுறுத்துவர்.

### பொருளாதார வெட்டுத் தீர்மானம்

❖ இத்தீர்மானத்தின்படி கோரிக்கை வைக்கப்பட்டுள்ள மானிய கோரிக்கைக்கு பதிலாக உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கீடு செய்வர்.

### அடையாள வெட்டு தீர்மானம்

❖ அமைச்சகத்தால் முன்வைக்கப்பட்ட மானிய கோரிக்கையில் உறுப்பினர்கள் ரூ.100 மட்டும் கழித்துக்கொண்டு மீதமுள்ள தொகைக்கு வாக்களிப்பர்.

❖

### 5. கையாடல் மசோதா தாக்கல் செய்தல்

❖ பண அளிப்பிற்காக லோக் சபாவில் வாக்களிக்கப்பட்ட பிறகு, கீழ்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தியாவின் தொகுதிநிதியிலிருந்து பணம் வழங்கப்பட்ட ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட வேண்டும்.

- லோக் சபாவினால் கேட்கப்பட்ட பண மசோதா
- இந்தியாவின் தொகுதிநிதியின் மீதான செலவுகள்

### முன்னணி மானிய வாக்களிப்பு

❖ புதிய நிதியாண்டு துவங்குவதற்கு முன் நாடாளுமன்றம் முழு பட்ஜெட்டின் மீது வாக்களிக்க முடியாததால், மீதமுள்ள காலத்தில் அரசாங்கத்தை நடத்துவதற்கு நிதி தேவைப்படுவதால், இந்த அம்சம் உருவாக்கப்பட்டது.

❖ எனவே, முன்னணி மானிய வாக்களிப்பு எனும் சிறப்பு அம்சத்தின் மூலம் அந்த செலவுகளுக்கத் தேவையான நிதியை அரசாங்கம் பெற்றுக்கொள்கிறது.

❖ பொதுவாக முன்னணி மானிய வாக்களிப்பு இரண்டு மாதங்களுக்கு மட்டுமே எடுக்கப்படுகிறது.

❖ ஆனால் தேர்தல் காலத்தின் போதோ அல்லது கையாடல் மசோதாவின் மூலம் பணம் கிடைப்பதற்கு இரண்டு மாதத்திற்கு மேல் ஆனாலோ, முன்னணி மானிய வாக்களிப்பும் இரண்டு மாத காலத்தைத் தாண்டிச் செல்கிறது.

### 6. நிதி மசோதா தாக்கல் செய்தல்

❖ வரப்போகும் ஆண்டிற்கு இந்திய அரசாங்கத்திற்கான நிதிப் பிரேரணையைப் பெறுவதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.

❖ பண மசோதாவிற்கான அனைத்து நிபந்தனைகளும் இதற்குப் பொருந்தும்.

❖ கையாடல் மசோதா போன்றல்லாமல் நிதி மசோதாவில் திருத்தங்கள் செய்யப்பட முடியும்.

## இதர மானியங்கள்

### துணை மானியக் கோரிக்கை (Supplementary Grant)

❖ நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட துறைக்கான மானியம் போது மானதாக இல்லை என்றால் துணை மானியக் கோரிக்கை மேற்கொள்ளப்படும்.

### கூடுதல் மானியக் கோரிக்கை (Additional Grant)

❖ நடப்பு நிதியாண்டில் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட இனங்களுடன் புதியதாக ஒரு பணியை தொடங்க போதுமான நிதியை

பெறக் கூடுதல் மானிய கோரிக்கை மேற்கொள்ளப்படும்.

## கடனுக்கு ஓட்டளித்தல் (Vote of Credit)

❖ பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட மானிய கோரிக்கையை தவிர்த்து, நாட்டில் எதிர்பாராமல் ஏற்படும் திடீர் செலவினங்களை மேற்கொள்ள பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்கும். இது தொகையை பூர்த்தி செய்யாத காசோலையாக கருதப்படும்.

## நிதி

### ஒருங்கிணைப்பு (சரத்து 266)

❖ இந்த நிதியானது இந்திய அரசிற்கு வரக்கூடிய அனைத்து வருவாய் மற்றும் செலவு இனங்களையும் உள்ளடக்கியது ஆகும்.

❖ வரிகள் மற்றும் தீர்வைகள், இந்திய அரசாங்கத்தால் பெறப்படும் எல்லா வருவாய்களும், கருவூலச் சீட்டுகளின் வாயிலாக வசூலிக்கப்படும் எல்லா கடன் தொகைகளும், ஒன்று திரட்டப்பட்டு உருவாக்கப்படுவதே இந்தியாவின் திரட்டு நிதியாகும்.

### பொது கணக்கு நிதி (சரத்து 286)

❖ ஒருங்கிணைப்பு நிதியில் உட்படாத இதர பொதுமக்கள் நிதி இதில் அடங்கும். அவைகளாவன,

- வருங்கால வைப்பு நிதி
- நீதித்துறை வைப்பு நிதி
- வங்கி சேமிப்பு நிதி
- துறை ரீதியான வைப்புநிதி
- பணம் செலுத்துதல்

❖ பொதுக் கணக்கு நிதியானது நிர்வாக அதிகாரிகளின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வகிக்கப்படும்.

### அவசரகால நிதி (சரத்து 267)

❖ எதிர்பாராமல் ஏற்படும் இயற்கை சீரழிவுகளை சீரமைக்க இந்த நிதி பயன்படுகிறது. இந்த நிதியை குடியரசுத்தலைவர் சார்பாக நிதிச்செயலர் பராமரிக்கிறார்.

## மாநிலங்களவையின் நிலை

### மக்களவைக்குச் சமமான நிலையில் மாநிலங்களவை

❖ சாதாரண மசோதாக்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெற்றிபெறச் செய்தல்.

❖ அரசியலமைப்பு திருத்த மசோதா அறிமுகப்படுத்துதல் மற்றும் வெற்றிப்பெறச் செய்தல்.

❖ குடியரசுத்தலைவரின் தேர்தல் மற்றும் பதவி நீக்கம்.

❖ குடியரசுத்தலைவரால் நடைமுறைப் படுத்தப்படும் அவசரச் சட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல்.

❖ 3 வகையான தேசிய நெருக்கடி நிலைக்கு ஒப்புதல் அளித்தல்.

### மக்களவைக்குச் சமமற்ற நிலையில் மாநிலங்களவை

❖ பண மசோதா மக்களவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும் மாநிலங்கள் அவையில் அறிமுகப்படுத்த முடியாது.

❖ பாராளுமன்ற கூட்டுக்கூட்டத்திற்கு மக்களவைத் தலைவரே தலைமை தாங்குகிறார்.

❖ மாநிலங்களவை, பட்ஜெட் மீது மட்டுமே விவாதம் மேற்கொள்ள இயலும், மானிய கோரிக்கை மீது வாக்களிக்க இயலாது.

❖ மாநிலங்களவை, அமைச்சரவைக் குழு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர இயலாது.

### மாநிலங்களவையின் சிறப்பு அதிகாரம்

- ❖ மாநிலப் பட்டியலில் உள்ள ஏதேனும் ஒரு இனத்தில் மத்திய அரசு சட்டம் இயற்ற விரும்பினால் ஷரத்து 249ன் படி மாநிலங்களவையே அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வர இயலும்.
- ❖ பாராளுமன்றமானது இந்தியா முழுமைக்குமான பொதுப்பணியை ஏற்படுத்த விரும்பினால் ஷரத்து 312ன் படி மாநிலங்களவையே அதனை செய்ய இயலும்.

### ராஜ்ய சபாவின் கீழ்வரும் செயற்குழுக்கள்

| செயற்குழுவின் பெயர் | அமைச்சகம் / துறை |
|---|---|
| வணிக செயற்குழு | வணிகம் மற்றும் தொழிற்சாலை |
| உள்துறை விவகார செயற்குழு | 1. உள்துறை அமைச்சகம்<br>2. வட கிழக்கு மாநிலங்களின் முன்னேற்றம் |
| மனிதவள மேம்பாட்டு செயற்குழு | 1. மனித வள மேம்பாடு<br>2. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் விவகாரம் |
| தொழிற்சாலை செயற்குழு | 1. கனரகத் தொழில் மற்றும் பொது நிறுவனங்கள்.<br>2. சிறு தொழிற்சாலைகள்.<br>3. வேளாண்மை மற்றும் கிராமப்புற தொழிற்சாலைகள். |
| அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் சுற்றுசூழல் மற்றும் காடுகள் ஆகியவற்றிற்கான செயற்குழு | 1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்.<br>2. வானியல்<br>3. புவி அறிவியல்<br>4. அணு ஆற்றல்<br>5. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை |
| போக்குவரத்து, சுற்றுலா மற்றும் கலாச்சார செயற்குழு | 1. வான்வழி போக்குவரத்து<br>2. கப்பல், வாணிகம், சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை.<br>3. கலாச்சாரம்<br>4. சுற்றுலா |
| சுகாதாரம் மற்றும் குடும்பநல செயற்குழு | சுகாதாரம் மற்றும் குடும்ப நலம் |
| ஊழியர்கள், பொதுக் குறைபாடுகள், சட்டம் மற்றும் நிதிக்கான செயற்குழு | 1. சட்டம் மற்றும் நீதி<br>2.ஊழியர்கள், பொதுக்குறைபாடுகள் மற்றும் |
| | ஓய்வுத்தொகை |
| வேளாண்மை செயற்குழு | 1. வேளாண்மை<br>2. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் |
| தகவல் தொழில்நுட்ப செயற்குழு | 1. தகவல் தொடர்பு மற்றும் தகவல்தொழில் நுட்பம்<br>2.தகவல் மற்றும் ஒளிபரப்பு |
| பாதுகாப்பு செயற்குழு | பாதுகாப்பு |
| ஆற்றல் செயற்குழு | 1. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்<br>2. ஆற்றல் |
| வெளியுறவு விவகார செயற்குழு | 1. வெளியுறவு விவகாரம்<br>2. இந்தியாவில் வசிக்காத இந்தியர் விவகாரம் |
| நிதி செயற்குழு | 1. நிதி<br>2. கம்பெனி விவகாரம்<br>3. திட்டம்<br>4. புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கம் |
| உணவு, நுகர்வோர் விவகாரம் மற்றும் பொது விநியோக செயற்குழு | நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும பொது விநியோகம் |
| தொழிலாளர் செயற்குழு | 1. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு<br>2. நெசவு மற்றும் ஜவுளி |
| பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு செயற்குழு | பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு |
| ரயில்வே செயற்குழு | ரயில்வே |
| நகர்ப்புற மேம்பாட்டு செயற்குழு | 1. நகர்ப்புற மேம்பாடு<br>2. வீடுகள் மற்றும் நகர்ப்புற வறுமை |
| நீர்வள செயற்குழு | நீர் வளங்கள் |
| ரசாயனம் மற்றும் உரங்கள் செயற்குழு | ரசாயனம் மற்றும் உரங்கள் |
| கிராமப்புற மேம்பாட்டு செயற்குழு | 1. கிராமப்புற மேம்பாடு<br>2. பஞ்சாயத்து ராஜ் |
| நிலக்கரி மற்றும் எ∴கு செயற்குழு | 1. நிலக்கரி மற்றும் சுரங்கம்<br>2. எ∴கு |
| சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் செயற்குழு | 1. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல்<br>2. பழங்குடியினர் விவகாரம் |

### முன்னால் மக்களவைத் தலைவர்கள்

| மக்களவை | பெயர் | பதவி (ஆரம்பம் - முடிவு) |
|---|---|---|
| 1 –வது | திரு.கணேஷ் வாசதேவ் மவ்லங்கர்<br>திரு.எம்.ஏ.அய்யங்கார் | 1952 முதல் 1956<br>1956 முதல் 1957 |
| 2 –வது | திரு.எம்.ஏ.அய்யங்கார் | 1957 முதல் 1962 |

| | | |
|---|---|---|
| 3 –வது | திரு.சா்தாா் உக்கம் சிங் | 1962 முதல் 1967 |
| 4 –வது | திரு.என்.சஞ்சீவ் ரெட்டி<br>திரு.ஜி.எஸ்.தில்லான் | 1967 முதல் 1969(ராஜினாமா)<br>1969 முதல் 1971 |
| 5 –வது | திரு.ஜி.எஸ்.தில்லான<br>திரு.பலி ராம் பகத் | 1971 முதல் 1975<br>1976 முதல் 1977 |
| 6 –வது | திரு.என்.சஞ்சீவ் ரெட்டி<br>திரு.கே.எஸ். கெக்டெ | 1977 முதல் 1977(ராஜினாமா)<br>1977 முதல் 1980 |
| 7 –வது | திரு.பல்ராம் ஜாக்கா்* | 1980 முதல் 1985 |
| 8 –வது | திரு.பல்ராம் ஜாக்கா்* | 1985 முதல் 1989 |
| 9 –வது | திரு.ரபி ராய் | 1989 முதல் 1991 |
| 10 –வது | திரு.சிவராஜ் பாட்டில் | 1991 முதல் 1996 |
| 11 –வது | திரு.பி.எ.சங்மா | 1996 முதல் 1998 |
| 12 –வது | திரு.ஜி.எம்.சி. பாலயோகி | 1998 முதல் 1999 |
| 13 –வது | திரு.மனோகா் ஜோஷி | 1999 முதல் 2002<br>2002 முதல் 2004 |
| 14 –வது | திரு.சோம்நாத் சட்டா்ஜி | 2004 முதல் 2009 |
| 15 –வது | திருமதி.மீராகுமாரி | 2004 முதல் 2014 |
| 16 –வது | திரு.சுமித்ரா மகாராஜன் | 2014 – பதவியில் இருப்பவா் |

- காங்கிரஸ் கட்சியை சோ்ந்த பல்ராம் ஜாகா் மிக நீண்ட காலம் சபாநாயகராக 9 ஆண்டுகள், 10 மாதங்கள், 27 நாட்கள் பதவியாற்றினாா்.

WhatsApp Group -ல் சேர - கிளிக் செய்யவும்

Facebook Examsdaily Tamil - FB ல் சேர - கிளிக் செய்யவும்

Telegram Channel கிளிக் செய்யவும்